**செய்தி வெளியீடு எண்.397** **நாள்.2.7.2007**

## திருவொற்றியூர் நகராட்சி – துறைமுக போக்குவரத்து கழகம் கண்டெயினர் நிறுத்துமிடம் – ஒப்பந்தம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் துறைமுக போக்குவரத்து சார்ந்த நடவடிக்கைகளால் பெரிய அளவு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதை தவிர்ப்பதற்காக லாரிகளுக்காக தனியே கன்டெயினர் நிறுத்துமிடம் ஏற்படுத்த பரிசீலிக்கப்பட்டது. இதன் தொடர்பாக துறைமுக போக்குவரத்து கழகம் மற்றும் தமிழக அரசின் நகராட்சி நிர்வாகத்துறை விரிவாக ஆலோசனை செய்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருவொற்றியூர் நகராட்சிக்கு சொந்தமான எண்ணூர் விரைவு சாலையில் இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 8.5.2007 திருவொற்றியூரில் நடைபெற்ற விழாவில் இதனை அறிவித்தார். இதன்படி நகராட்சிக்கு சொந்தமான எண்ணூர் விரைவு சாலையில் அமைந்துள்ள 11.26 ஏக்கர் நிலத்தினை சென்னை துறைமுக பொறுப்பு கழகத்திற்கு அளித்திட ஒப்புதல் கோரி சென்னை துறைமுக பொறுப்பு கழகம் முறைப்படி கோரிக்கை விடுத்தது. இதற்கு சம்மதம் தெரிவித்த நகராட்சி நிர்வாகத்துறை இடத்திற்கு மாத வாடகையாக ரூ.11 இலட்சம் நிர்ணயித்தது. இதனை சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகமும் சென்னை துறைமுக பொறுப்பு கழகமும் 13.06.07 அன்று இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின்படி சம்பந்தப்பட்ட இடம் 01.07.07 முதல் சென்னை துறைமுக பொறுப்பு கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது,. இதனால் திருவொற்றியூர் நகராட்சிக்கு மாத வாடகையாக ரூ.11 இலட்சம் கிடைப்பதுடன், முன்பணமாக ரூ.33 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும் கன்டெய்னர் நிறுத்துமிடம் செயல்பட துவங்குவதால் வடசென்னையில் போக்குவரத்து நெரிசலும் வெகுவாக குறைய வாய்ப்பு ஏற்படும்.

ஆண்டுதோறும் போக்குவரத்து நெரிசலால் சராசரியாக ஏற்படும் 16 உயிர் இழப்புகளும் 72 காயம் ஏற்படுத்தும் விபத்துகளும் தடுக்க வாய்ப்பு ஏற்படும்.

துறைமுக பொறுப்பு கழகத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த ஆவணம் மற்றும் முன் பணத் தொகை ரூ.33 இலட்சத்திற்கான காசோலையையும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களால் திருவொற்றியூர் நகராட்சியின் நகர்மன்றத் தலைவரிடம் இன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, நகராட்சி நிர்வாக துறை செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப. ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி இ.ஆ.ப. இணை ஆணையர் திரு.ஹித்தேஷ் குமார் மக்வானா, இ.ஆ.ப. மற்றும் திருவொற்றியூர் நகராட்சி ஆணையர் திரு.சு.சிவசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9